பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 11 வியாழக்கிழமை 28.10.2021 கதிர் 220

## 24 மணிநேரத்தில் 21 பேர் சிக்கினர்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. ☞2



## ஆட்சிக் கவிழ்ப்பு நோக்கம் அல்ல; அரசைப் பாதுகாக்கவே போராட்டம்

### பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அறிவிப்பு

ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அல்ல, அரசைப்பாதுகாக்கவே போராடுகின்றோம் என்று அறிவித்தல் விடுத்துள்ளனர் அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது எனவும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தனிவழி பயணத்துக்குத் தயாராகி வருகின்றனர் எனவும் வெளியாகும் தகவல்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

தேசியவளங்களையும், நாட்டையும்பாதுகாக்கவே 69 லட்சம் பேர் எமது அணிக்கு வாக்களித்தனர். எனவே, மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட ☞2

## சீண்டிப் பார்த்தால் சிதறிப் போவீர்கள்!

### கோட்டாவுக்கு சம்பந்தன் எச்சரிக்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் பேசும் மக்களின் மனதைச் சீண்டிக் கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படாது. ஒட்டுமொத்தத்தமிழ்பேசும்மக்களின் வெறுப்பின் வெளிப்பாட்டைத்தான் காலப்போக்கில் ஜனாதிபதி சந்திப்பார். ☞2



### அரச நிறுவனங்களுக்கு

## 164 வாகனங்கள் இன்று கோட்டாவால் கையளிப்பு

துறைசார் அலுவல்களுக்குத் தேவையான அம்புலன்ஸ் வாகனங்கள் 50, தண்ணீர் பவுஸர்கள் 52, டபிள் கப் ரக வாகனங்கள் 62 உள்ளிட்ட 164 வாகனங்களை, உரிய அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று நடைபெற்றது.

இதன்படி, சுகாதார அமைச்சு மற்றும் சுவசெரிய அம்புலன்ஸ் சேவைகளுக்கு 50 அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டமையோடு, வனஜீவராசிகள் திணைக்களம், நீர்ப்பாசனத் ☞2

## ஒற்றுமைக்கான சைக்கிள் ஓட்டம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

சர்தார் வல்லபாய் படேலின் 146 ஆவது பிறந்தநாள் மற்றும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டு தினத்தையொட்டி 'ஆசாதிகா அம்ரித்ம ஹோற்சவ்' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஒற்றுமைக்கான சைக்கிள் ஓட்ட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வை யாழ். இந்தியத் துணைத் தூதரகம் நடத்தியது. ☞2

## யாழ். ஸ்ரான்லி வீதி அகலிப்புப் பணியில் ஆளும் கட்சியினர் இடையே பலப்பரீட்சை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி அகலிப்புப் பணியில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலப் பரீட்சை இடம்பெறுகின்றது என வீதி வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ☞2



## இந்திய மீனவர்கள் 23 பேருக்கும் மறியல்

### காரைநகர் கடற்படை முகாமில் தடுத்துவைப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

எல்லை தாண்டிய தமிழக மீனவர்கள் 23 பேரையும் இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது. ☞2

## வாகன விபத்தில் 6 பேர் படுகாயம்!

(ந.லோகதயாளன்)

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி - தனங்கிளப்பு பகுதியில் இன்று காலை டிப்பர் வாகனமும் பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பட்டா ☞2



## பொலிஸ் அதிகாரிகள் 8 பேருக்கு இடமாற்றம்!

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்க உள்ளிட்ட இரண்டுபிரதிப்பொலிஸ்மா அதிபர்களுக்கும், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 6 பேருக்கும் உடன் அமுலாகும் ☞2

## இலங்கைக்கான உதவிகள் தொடரும்!

### மஹிந்தவிடம் சீனத் தூதுவர் வாக்குறுதி



இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ.ஷென் ஹொன் முன்னிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பாராட்டைத் தெரிவித்தார். ☞2

## 24 மணிநேரத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 417 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது மேல் மாகாணத்திலிருந்து வெளியேற முற்பட்ட 1,248 வாகனங்களில் பயணித்த 616 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று மேல் மாகாணத்துக்கு உள்நுழைய முற்பட்ட 1,405 வாகனங்களில் பயணித்த 774 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி மேல் மாகாணத்துக்கு உள்நுழைய மற்றும் வெளியேற முற்பட்ட 128 வாகனங்கள் 201 பேருடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

## ஆட்சிக் கவிழ்ப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அதற்காக நாம் அரசுக்குள் இருந்துகொண்டு போராடுவோம்.

ஆட்சிமாற்றமோ, ஆட்சிக்கவிழ்ப்போ எமது நோக்கம் அல்ல. இந்த அரசை முன்னோக்கி அழைத்துச் சென்று, நாட்டைப் பாதுகாக்க வேண்டும். பிரச்சினைகள் உள்ளன. அவற்றை பேச்சு மூலம் தீர்க்கவே முற்படுகின்றோம் என்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சீண்டிப் பார்த்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

-ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.

-இலங்கை அரசமைப்பின் 33 ஆம் உறுப்புரையில், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணியின் தலைவராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்ற - பின்னர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

-சிறைத்தண்டனை அனுபவித்த - தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வரும் ஒருவரை ஜனாதிபதி செயலணியின் தலைவராக எந்தவகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?

13 உறுப்பினர்களைக் கொண்ட இந்த விசேட ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை. இது ஜனாதிபதியின் திட்டமிட்ட செயலா?

ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி குழுக்களை - செயலணிகளை நியமிக்கலாம்.

ஆனால், இவ்விதமான தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் நாட்டினுடைய ஒற்றுமை, சமத்துவம், நீதி, கௌரவம் போன்ற கருமங்களில் மிகவும் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி இவ்விதமான கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படுவது மிகவும் கஷ்டம்; அது ஏற்படாது.

ஆனபடியால் ஜனாதிபதி இவ்விதமான கருமங்களைச் செய்கின்றபோது அவற்றை நாட்டு மக்கள் - விசேடமாக தமிழ்பேசும் மக்கள் - தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கக் கூடாது. அதை அவர்கள் வெறுப்பார்கள்.

அந்த வெறுப்பின் வெளிப்பாட்டைக் காலப்போக்கில் அவர்கள் வெளிக்கொணர்வார்கள். அதுதான் நிலைமை - என்றார்.

## இந்திய மீனவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 14ஆம் திகதி தமிழகத்தில் இருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிக்க வந்த இரண்டு படகுகளையும், அதிலிருந்த 23 மீனவர்களையும் கைதுசெய்த கடற்படையினர் காரைநகர் கடற்படை முகாமில் தங்க வைத்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்த நீதிவான் தமிழக மீனவர்களை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதற்கமைய நவம்பர் மாதம் 11ஆம் திகதி வரை 23 தமிழக மீனவர்களும் காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்படுவர்.

## யாழ். ஸ்ரான்லி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை வர்த்தகர்கள் மற்றும் பயணிகளின் நன்மை கருதி அகலிப்பு செய்து தருமாறு யாழ்ப்பாணம் மாநகர சபை 2019ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்தது. இதன் பெயரில் பிரதேச செயலக ஒத்துழைப்புடன் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஓர் ஒப்பந்த நிறுவனம் மூலம் வீதி அகலிப்பு செய்யப்படுகின்றது.

இவ்வாறு இடம்பெறும் பணியின் போது ஸ்ரான்லி வீதியில் உள்ள சிறீதர் தியேட்டர் முன்பாக வீதியை நோக்கி 7 அடி நீளத்தில் இருந்த அலங்கார தொட்டி இடித்து அகற்றப்பட்டது. இதன்போதே சர்ச்சை உருவெடுத்து உடைக்கப்பட்ட அலங்காரத் தொட்டி மீண்டும் அமைக்கப்படுகின்றபோதும் வர்த்தகர்களின் கடைகள் மட்டும் தொடர்ந்தும் இடிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடைகள் மட்டும் இடிக்கப்படும்போது சிறீதர் தியேட்டர் முன்பாக அரசியல் கட்சிக்காக அமைக்கப்படுகின்றதாகக் கூறும் குற்றச்சாட்டுத் தொடர்பில் மாநகர சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஸ்ரான்லி வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்டது என்ற வகையில் அனைத்துப் பணிகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபையே முன்னெடுக்கின்றதே அன்றி அதற்கும் மாநகர சபைக்கும் தொடர்பு கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறானால் சிறீதர் தியேட்டருக்கு மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு என வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டபோது, விதிவிலக்கு அல்ல அனைவரின் ஒப்புதலை பெற்றே இடிக்கும் பணி இடம்பெறும் நிலையில் ஒப்பந்தக்கார நிறுவனத்தினர் சிறீதர் தியேட்டரில் உள்ளவர்களின் அனுமதியைப் பெறாமல் இடித்துவிட்டனர். இதனால் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்தமையால் மீளக் கட்டிக்கொடுக்கப்படுகின்றது என்றனர்.

இது தொடர்பில் ஈ.பி.டி.பியினரின் கருத்தைத் தேடியபோது வீதி அகலிப்புப் பணியை எடுத்துள்ளது ஓர் அரசியல்வாதியின் ஆதரவாளர் என்ற அடிப்படையில் அவர்கள் ஓடிவந்து எந்தவொரு தகவலும் இன்றி எமது கட்டுமானத்தையே முதலில் இடித்தமையினாலேயே அதனை மீள அமைக்குமாறு கோரினோம் என்கின்றனர்.

இதேநேரம் இந்த ஒப்பந்தகாரருக்கும் எமக்கும் தொடர்பில்லை என்கின்றனர் நாடாளுமன்ற உறுப்பினர் தரப்பு.

## 164 வாகனங்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு, தண்ணீர் பவுசர்கள் மற்றும் டபள் கப் ரக வாகனங்கள் கையளிக்கப்பட்டன.

அமைச்சர்களாக ஜனக பண்டார தென்னகோன், கெஹலிய ரம்புக்வெல, சி.பீ.ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல உள்ளிட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்ட 150 மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸ் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வும், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்கள், இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் போக்குவரத்துச் சேவைக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்கள், ஜனாதிபதியால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்ன ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அக்கிரா மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஒற்றுமைக்கான ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரிகள், தூதரகத்திலிருந்து சைக்கிளில் பயணித்து நாவற்குழி பகுதியில் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் அமைந்துள்ள சிவபூமி (தட்சணாமூர்த்தி) கோயிலை அடைந்தனர்.

அங்கு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜை வரவேற்றார்.

தொடர்ந்து 'உலகம் ஒரு குடும்பம் எனும் வசுதைவ குடும்பகத்தின்' வழிகாட்டுதலின் பேரில், இந்தியத் துணைத் தூதுவர், துணைத் தூதரகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து இந்திய மற்றும் இலங்கை மக்களின் நல்வாழ்வுக்காக சிறப்பு வழிபாடு செய்தார்.

## இலங்கைக்கான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சீனத் தூதுவர் சீ.ன்ஹொனை நேற்று அலரி மாளிகையில் சந்தித்தபோதே இவ்வாறு கூறினார்.

கொரோனாத் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு வாழ்த்துத் தெரிவித்த சீனத் தூதுவர் சீ.ன்ஹொன், அதற்கு சீன அரசின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சீன மக்கள் வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி இடையிலான 10 பில்லியன் சீன யுவான் மதிப்பிலான இருதரப்பு நிதி பரிமாற்ற ஒப்பந்தமானது, உலகளாவிய முதலீட்டாளர்களின் உணர்வை வலுப்படுத்தவும், இலங்கையின் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் சீனத் தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 65 ஆண்டு நிறைவு மற்றும் இறப்பர் அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமை ஆகியவற்றைக் குறிக்கும் 2022ஆம் ஆண்டானது, இலங்கை - சீன இருதரப்பு உறவின் மிக முக்கியமான ஆண்டாக விளங்கும் எனவும் சீனத் தூதுவர் சீ.ன்ஹொன் நம்பிக்கை தெரிவித்தார்.

## பொலிஸ் அதிகாரிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் இதனை இன்று தெரிவித்துள்ளது.

## வாகன விபத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரக வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 6 பேரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## சீரழியும் சட்டவாட்சி

தமது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியில் நிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த நிறைவுக்கான பரிசாக நாட்டு மக்களுக்கு அளித்திருப்பதுதான் வண. கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியாகும்.

சட்டத்தின் பெயரால் பல கேலிக்கூத்துகளை அரங்கேற்றி வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது 'ஒரு நாடு; ஒரு சட்டம்' என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரத்தையும் கூடக் கேலிக்கூத்தாகக் கணிக்கும் விதத்தில்தான் கையாளுகின்றார் என்பது அவரது நியமனத்தின் மூலம் தெளிவாகின்றது.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராகப் பகிரங்க வெளியில் மோசமான கருத்துக்களை முன்வைத்து, பௌத்த, சிங்கள வெறித்தனத்தத்துடன் செயற்படுபவர்களுக்கு நாட்டின் தேசிய வீரர் என்ற உயரிய கௌரவம் வழங்கப்படும் என்ற கோட்பாடு இந்த நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது உண்மை.

இந்த நாட்டின் இரண்டாவது பெரும்பான்மை இனம் தமிழர்கள். அவர்கள் யாரும் இந்த செயலணிக்குள் உள்வாங்கப்படவில்லை.

நாட்டின் மக்கள்தொகையில் அரைவாசிப் பங்கினர் மகளிர். 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதியின் திட்டத்துக்கான பரிந்துரையை சமர்ப்பிக்க வேண்டிய 13 பேரைக் கொண்ட செயலணியில் ஒருவர் கூட மகளிர் அல்லர்.

போதாக்குறைக்கு அதிர்ஷ்டமற்ற இலக்கம் என்று கூறப்படும் 13 உறுப்பினர்களைக் கொண்டதாக இந்தப் பேரணி அமைக்கப்பட்டிருக்கின்றது.

”ஜனாதிபதி தமது அதிகாரத்தை துஷ்ட பிக்கு ஒருவரிடம் கையளித்து இருக்கின்றமை மிக மோசமான நடவடிக்கை. நம்மை கவலைப்பட செய்யும் செயற்பாடு இது. சிறுபான்மையினருக்கு எதிராக இந்த நாட்டில் வன்முறைகளைத் தூண்டி விடுவதில் முன்னின்றவர் இந்த பிக்கு. கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற இத்தகைய இன வன்முறை சம்பவங்கள் இடையே இவர் முன்னணியில் திகழ்ந்தவர். அண்மைய வாரங்களில் அரச ஊடகங்களில் அவர் தோன்றி மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல் நடக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்து வரும் நிலையில் இந்த நியமனம் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றமை மேலும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது” – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கூறியிருக்கின்றமை கவனிப்புக்குரியதாகின்றது.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி சீரழிந்து செல்வதன் வெளிப்பாடுதான் இது.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்து, சட்டத்தைக் கேள்விக்கும் கேலிக்குமுள்ளாக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். கிரிமினல் குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டவர்களை ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை என்ற பெயரில் நீதிமன்ற வழக்குகளில் இருந்து விடுவிக்கிறார். புலனாய்வு செய்து அவர்களை நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்த புலனாய்வாளர்களையே நீதிமன்றத்தில் நிறுத்தி, அவமதித்து, முறையற்ற விதத்தில் தண்டிக்க முயற்சிக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தப் பதவியின் நிமித்தம் ஆற்றிய காரியங்களுக்காக தாம் நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை மூலம் அவர்களை சட்டத்தில் மாட்டும் தந்திரோபாயத்தை கையாளுகின்றார் ஜனாதிபதி.

இப்படி சட்டமுறை ஆட்சியையே கேள்விக்குள்ளாக்கும் ஒரு நியமனம்தான் இந்த ஜனாதிபதி செயலணியும் அதன் தலைவர் நியமனமுமாகும். நாட்டில் நீதி, நியாயம், சட்டம் சீரழிகின்றமையைப் பளிங்குபோல் காட்டும் ஒரு விவகாரம் – உதாரணம் – இது.

# இலங்கை பயணிகளுக்கான சிறப்பு கட்டுப்பாடுகள் ரத்து!

## இத்தாலி வெளியிட்டுள்ள அறிவிப்பு

இலங்கை, பிரேஸில், இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து அத்தியாவசிய தேவைகளுக்காக நாட்டுக்கு வருபவர்கள் ஈ பட்டியலுக்கு மாற்றப்பட்டதால் இனி தடை செய்யப்படமாட்டார்கள் என்று இத்தாலிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஒக்ரோபர் 26 முதல், சுகாதார அமைச்சின் இந்த உத்தரவு பிரேஸில், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கையிலிருந்து வருபவர்களுக்கு முன்னர் இருந்த சிறப்புக் கட்டுப்பாடுகளை ரத்து செய்துள்ளது, பின்னர் அவை ஈ பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே அந்த நாடுகளுக்கு பொருந்தும் விதிகளுக்கு உட்பட்டவை என இத்தாலிய வெளியுறவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அமைச்சகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

புதிய விதிகளின் அடிப்படையில், ஒக்ரோபர் 26 முதல், மேற்கூறிய நான்கு நாடுகளில் இருந்து இத்தாலியை அடையும் பயணிகள் நாட்டுக்குள் நுழைவதற்கு அனுமதிக்க சுகாதார அமைச்சகத்தின் அங்கீகாரம் வழங் கத் தேவையில்லை.

எவ்வாறாயினும், வேலை, உடல்நலம் மற் றும் படிப்பு தொடர்பான காரணங்களுக்காக இத்தாலிக்குச் செல்லத் திட்டமிடுபவர்கள் மட்டுமே நாட்டுக்குள் நுழையத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, பிற அத்தியாவசிய தேவைகளுக்காக இத்தாலிக்குள் நுழைய வேண்டியவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இத்தாலிய சுகாதார அமைச்சகம் வழங்கிய தரவுகளின்படி, கடந்த 14 நாளகளில் மேற்படி நான்கு நாடுகளில் ஒன்றில் தங்கியிருந்தாலோ அல்லது பயணித்தபின்னாலோ இத்தாலிக்குத் திரும்பும் நபர்கள், நுழைவதற்கு 72 மணி நேரத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட எதிர்மறையான கொவிட் 19 சோதனை அறிக்கைய சமர்ப்பிக்க வேண்டும்.

கூடுதலாக, குறித்த நாடுகளில் இருந்து வரும் பயணிகள் டிஜிற்றல் பயணிகள் இருப்பிடப் படிவத்தைப் பூர்த்தி செய்து, அவர் கள் வருகை தொடர்பாக சுகாதார அதிகாரி களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள தேவைகள் தவிர, ஈ பட்டியலில் இருந்து வரும் பயணிகள், இத்தாலியில் நுழைந்தவுடன் பத்து நாள் தனிமைப்படுத்தல் தேவையைப் பின்பற்றி, சுய-தனிமைக் காலத்தின் முடிவில் மற்றொரு கோவிட் – 19 சோதனைக்கு உட் படுத்தப்பட வேண்டும்.

மேலும், கடந்த இரண்டு வாரங்களில் ஈ பட்டியல் நாடுகளில் ஒன்றில் தங்கிய பிறகு அல்லது பயணித்த பிறகு இத்தாலிக்கு நுழைவது பின்வரும் நபர்கள், குழுக்களுக்கு அனுமதிக்கப்படுகிறது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# வவுனியாவில் விபத்து; நால்வர் படுகாயம்





கனகராயன்குளம் பகுதியில் பிரதேச சபையின் கழிவகற்றும் உழவு இயந்திரமும், ஹயஸ் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் காயமடைந்துள்ளனர் என கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கழிவகற்றும் உழவு இயந்திரம் கழிவுகளை ஏற்றிக்கொண்டு ஏ9 வீதியில் புளிங்குளம்நோக்கிபயணித்துகொண்டிருந்த போது அதே வீதி வழியாக வந்த ஹயஸ் ரக வாகனம் கனகராயன்குளம் பகுதியில் வைத்து கழிவகற்றும் உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தையடுத்து ஹயஸ் ரக வாகனப் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதுடன் கழிவகற்றும் உழவு இயந்திரமும் கடும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இரு வாகனங்களிலும் பயணித்த 4 பேர் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் வவுனியா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப்பிரிவில்சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கனகராயன் குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கையில் 60 சத வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டது

## சுகாதார அமைச்சு

இலங்கையில் 60 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட் டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

நேற்று (புதன்கிழமை) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு மூன்றாவது கொரோனா தடுப்பூசி வழங்குவதற்குக் தேவையான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# குறைவாக சாப்பிடுங்கள்: நாட்டு மக்களுக்கு வடகொரிய தலைவர் வேண்டுகோள்!

உணவு நெருக்கடியை எதிர்க்கும் முயற்சியில், 2025ஆம் ஆண்டு வரை தனது நாட்டு மக்களை குறைவாக சாப்பிடுமாறு வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன், கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், 'விவசாயத் துறை அதன் தானிய உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றத் தவறியமையால் மக்களின் உணவு நிலைமை இப்போது பதற்றமாக உள்ளது' என கிம் கூறினார்.

பொருளாதாரத் தடைகள், கொரோனா வைரஸ் தொற்றுநோய் மற்றும் கடந்த ஆண்டு சூறாவளி ஆகியவற்றால் வடகொரியாவில் உணவுப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸ் பரவுவதற்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 2020ஆம் ஆண்டு ஜனவரியில் வடகொரியா, அத்தியாவசியத் தேவைகளுக்காக சார்ந்திருந்த சீனாவுடனான தனது எல்லையை மூடியது.

இதனால், வடகொரியாவில் உணவுப் பொருள்கள் பற்றாக்குறையால், அந்நாட்டில் வசிக்கும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து வருகிறது.



இதனிடையே 2025ஆம் ஆண்டுக்கு முன்னர் வட கொரியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் சுங்கச்சாவடிகளை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதற்கிடையே அரசாங்கம் தங்களுக்குத் தேவையான தானியங்களை தாங்களே உற்பத்தி செய்யுமாறு ஊக்குவிக்கிறது.

இந்தநிலையில், ஆளும் தொழிலாளர் கட்சியின் மத்திய இராணுவ ஆணையம், கிழக்கு மாகாணமான தெற்கு ஹம்கியோங்கில் ஆபத்தான நிலைமை குறித்து விவாதிக்க ஒரு கூட்டத்தை நடத்தியது.

அணுசக்தி மற்றும் ஆயுதத் திட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், சர்வதேசத் தடைகளால் ஏற்கனவே நலிவடைந்துள்ள தனிமைப் பொருளாதாரத்தின் நெருக்கடி பற்றிய கவலைகளுக்கு மத்தியில், இந்த சந்திப்பு வந்தது.

முன்னதாக, ஐ.நாவின் உணவு மற்றும் விவசாயக் கழகம், 'வடகொரியா தனது உணவுப் பற்றாக்குறையை சமாளிக்க வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யாவிட்டால் ஒகஸ்ட் தொடங்கி ஒக்ரோபருக்குள் நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடும். இந்த ஆண்டு மட்டும் 860,000 தொன் உணவுப் பஞ்சம் ஏற்படும்' என எச்சரித்திருந்தது.

1990ஆம் ஆண்டுகளில் சோவியத் ஒன்றியம் பிரிந்தது. அதுவரையில் சோவியத் ஒன்றியத்திடம் இறக்குமதி பொருள்களுக்காக பெருமளவில் நம்பியிருந்த வடகொரியா பெரும் பஞ்சத்தை சந்தித்தது.

இந்த பஞ்சத்தின்போது மக்கள் எலிகளையும் புல்லின் சாரையும் உண்டனர். அத்துடன், சுமார் 3 மில்லியன் வட கொரியர்கள் உயிரிழந்தனர்.

## ஜனாதிபதி மீதான விசாரணைக்கு பிரேஸில் நாடாளுமன்றம் ஒப்புதல்!




கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடியை மோசமாகக் கையாண்டதாகக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனோரா மீதான விசாரணைக்கு, நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

பிரேஸிலில் கொவிட் தொற்றுப் பரவல் தீவிரமாக இருக்கும்போது அறிவியல் ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்காமல், கொவிட் குறித்து தவறான தகவல்களை மக்களிடத்தில் பதிவு செய்து வந்ததால், போல்சனோரா மீது சட்டபூர்வமாகக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பரிந்துரை செய்தனர். ஜெய்ர் போல்சனோரா மீது பிரேஸில் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொலை உட்பட 13 குற்ற வழக்குகளைப் பதிவு செய்து விசாரணையை நடத்த வேண்டும் என்ற பரிந்துரையை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தனர். இதில் 11பேர் அடங்கிய பிரேஸிலின் நாடாளுமன்றக் குழுவில் 7 பேர் ஜெய்ர் போல்சனோரா மீது விசாரணை நடத்த வேண்டும் என்று வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றக் குழுவின் தலைவர் ஓமர் அசிஸ், இந்தப் பரிந்துரையை பிரேஸிலின் அரச தலைமை வழக்கறிஞரிடம் ஒப்படைத்தார்.

கொவிட் தடுப்பூசி செலுத்துவது அவசியமற்றது எனத் தெரிவித்த ஜெய்ர் போல்சனோரா, கொவிட்டைப் பற்றிக் கவலைப்படாமல், முகக்கவசம் அணியாமல், மக்கள் சுதந்திரமாக வெளியே வரவேண்டும் எனக் கூறியமைக்கு உலக அளவில் கண்டனம் எழுந்தது. அத்துடன் உலக சுகாதார அமைப்பால் கடும் விமர்சனத்துக்கும் உள்ளானார்.

## சீனாவில் மீண்டும் கொரோனா; லான்சூவில் ஊரடங்கு அமுல்!



சீனாவின் வடமேற்கு மாகாணமான கான்சுவின் தலைநகரமான லான்சூவில் நேற்று முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மக்கள் அவசரநிலை தவிர ஏனைய காரணங்களுக்காக வீட்டைவிட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குடியிருப்பு வளாகங்களில் இருந்து வெளியே செல்வதற்கு அனுமதிச்சீட்டு முறை நடைமுறைபடுத்தப்படுவதாக நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

சீனாவின் வடமேற்கு மாகாணமான கான்சுவின் தலைநகரம் லான்சூவில் நேற்று முன்தினம் புதிதாக 6 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த 18ஆம் திகதி முதல் மொத்தம் 39 பேர் இத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவுக்காக உடைமைகளை விற்கும் ஆப்கான் மக்கள்

உடனடியாக அவசரகால நடவடிக்கைஎடுக்கப்படாவிட்டால், லட்சக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்கள் இந்தக் குளிர் காலத்தில் பட்டினியாக இருக்க நேரிடும் என்று ஐநா உலக உணவுத் திட்டம் (WFP) எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள், அதாவது 2 கோடியே 28 லட்சம் பேர், உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளனர். அதே நேரத்தில் ஐந்து வயதுக் குட்பட்ட 32 லட்சம் குழந்தைகள் கடும் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படலாம் என்று உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தான் இப்போது உலகின் மிக மோசமான மனிதநேய நெருக்கடியில் சிக்கியிருக்கிறது என்று றுகுஊண அமைப்பின் செயல் இயக்குநர் டேவிட் பீஸ்லி கூறுகிறார்.

நாம் பேரழிவை எதிர்கொள்ளும் நிலைமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்கிறார் அவர். கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் வசமானது.

அமெரிக்கா எஞ்சியிருந்த தனது படைகளையும் குடிமக்களையும் அங்கிருந்து வெளியேற்றியது. அதனால் தலிபான்களின் ஆதிக்கம் நாடு முழுவதும் பரவியிருக்கிறது.

இதனால் ஏற்கெனவே நலிவடைந்த பொருளாதாரம் மேலும் பலவீனமானது.. வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டன. சர்வதேச செலாவணி நிதியமும் உதவியை நிறுத்தி வைத்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவிகிதத்துக்கும் அதிகமாக வெளிநாட்டு உதவிகள் கிடைத்தால், அந்த நாடு உதவி சார்ந்த நாடு என்று கருதப்படும். ஆனால் ஆப்கானிஸ்தானில் 40 சதவிகிதத்துக்கும் அதிகமாக வெளிநாட்டு உதவிகள் மூலமே கிடைக்கின்றன என உலக வங்கி கூறுகிறது.

இப்போது பல ஆப்கானியர்கள் உணவு வாங்குவதற்காகத் தங்களது உடைமைகளை விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தலிபான்களின் வெளிநாட்டுச் சொத்துகளை அணுக முடியாததால், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் தர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

**Jaffna College Institute of Technology**
**Calls for the following courses**

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட பிணை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது

பேரறிவாளனுக்கு மேலும் ஒரு மாதம் பிணை நீடிப்பு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த பேரறிவாளனுக்கு, மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக கடந்த மே மாதம் பிணை வழங்கி வெளியே செல்ல அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்து கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம் ஆகிய பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் அவர் சிகிச்சை பெற்றுவருகிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவக் காரணங்களுக்காக அவருக்கு இதுவரை நான்கு முறை பிணை நீடிக்கப்பட்டுள்ளது. இறுதியாக வழங்கப்பட்ட பிணை நேற்றோடு நிறைவடைந்த நிலையில், மேலும் ஒரு மாதம் அதனை நீடித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தற்போது ஐந்தாவது முறையாக பேரறிவாளனுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான் இந்து அல்லன்; என் மார்க்கம் சைவம்

## மருதுபாண்டியர் நினைவு நாளில் சீமான் பேட்டி



மருதுபாண்டியர் 220 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு போரூரில் உள்ள நாம் தமிழர் கட்சி தலைமை அலுவலகத்தில் மலர் வணக்க நிகழ்வு நடைபெற்றது.

இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டு மருது பாண்டியர் உருவப் படத் துக்கு மலர் தூவி அகவணக்கம் நடத்தினார். இதையடுத்து அவர் பேட்டியளித்தார். அப்போது பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், சசிகலா வருகின்றமை அ.தி.மு.க. கட்சியில் உள்ள தொண்டர்களின் விருப்பமாக இருக்கலாம். சசிகலா பயணம் செல்வதை நான் வரவேற்கிறேன். அது அவசியமான ஒன்று என நான் நினைக்கிறேன் என்றார்.

நாம் தமிழர் கட்சி பா.ஜ.க.வின் பீ–ரீம் என்று பேசப்படுவது தொடர்பாகக் கேட்டபோது, ‘இந்து சமயம் என்பது நாங்கள் விரும்பி ஏற்றதல்ல; அது எங்கள் மேல் திணிக்கப்பட்டது. மற்ற மாநிலத்தில் உள்ளவர்களைத் தமிழகம் ஏற்க முடியுமா? தமிழன் எப்போது தன்னை இந்தியன் என்று கருதினானோ அன்று செத்தது பண்பாடு. என்னை பா.ஜ.க.வின் பி – ரீம் என்று கூறுகிறீர்கள். என் கட்சியில் உள்ள இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடத்தில் விவாதம் செய்து நிரூபித்தால், நான் விட்டுவிட்டு செல்கிறேன்.

கிறிஸ்துவ, இஸ்லாமிய மக்களுக்கு தி.மு.க. செய்த நன்மைகளில் ஒன்றைச் சொல்லுங்கள் பார்ப்போம். பா.ஜ.க. 4 இடத்தில் வந்துவிட்டது நான் ஓர் இடத்தில் கூட வரவில்லை. நான் இந்து அல்லன். என் மார்க்கம் சைவம். நான் வேல் எடுக்கும்போது வெட்கப்பட்டார்கள்; பா.ஜ.க. எடுக்கும்போது பாராட்டுகிறார்கள். பின்பு ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஸ்டாலின் வேல் எடுத்தார்கள்’ என்றார். துரை வைகோ கட்சிக்கு வருகின்றமையை வரவேற்கிறேன் என்றும், பணியைச் செய்ய வாழ்த்துகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.



# இந்தியாவில் 12 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கான ஸைகோவ்–டி கொரோனாத் தடுப்பூசி விரைவில்!

இந்தியாவில் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஸைகோவ்-டி (ZyCov-D)என்ற கொரோனாத் தடுப்பூசியை அவசரகாலப் பயன்பாட்டின் கீழ் உபயோகிக்க இந்திய மத்திய மருந்துக் கட்டுப்பாடு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

அகமதாபாத்தைத் தளமாகக் கொண்ட ஸைடோஸ் கடிலா நிறுவனத்தின் ஸைகோவ்-டி தடுப்பூசிக்கான விலை தற்போது முடிவு செய்யப்பட்டுவிட்டதால், 12 வயதுக்கு மேற்பட்ட சிறாருக்கான தடுப்பூசித் திட்டம் மிக விரைவில் துவங்கும் என சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசிக்கு அவசரகாலப் பயன்பாட்டுக்கான அனுமதியை தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஏற்கனவே வழங்கியுள்ளமையால் அதன் உற்பத்தி ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாகவும் அவர் கூறினார். இந்தத் தடுப்பூசியின் விலை, அதன் தயாரிப்பாளர்கள் கோரிய விலையை விடக் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் கோவிஷீல்ட் மற்றும் கோவாக்சின் தடுப்பூசிகளைவிட விலை அதிகம் எனவும் மன்சுக் மாண்டவியா கூறினார்.

ஸைகோவ்-டி தடுப்பூசி மூன்று டோஸ்கள் கொண்டதும், பிரத்யேக ஊசி வாயிலாக செலுத்தக்கூடியதுமாகும். 12 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு இந்தத் தடுப்பூசியை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்றும் புற்றுநோய், சுவாசம், நரம்பியல் தொடர்பான நோய்கள், வாதநோய், இதயம், கல்லீரல், இரைப்பை குடல், பிறப்புறுப்பு மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள சிறுவர்கள் முதல் முன்னுரிமை பெறும் குழுவாக இருப் பார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவே இந்தியாவில் வழங்கப்படும் குழந்தைகளுக்கான முதல் கொரோனாத் தடுப்பூசியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# குறிப்பிட்ட தரப்பினர்தான் படிக்கவேண்டும் என்ற நிலையை மாற்றியது தி.மு.க. ஆட்சிதான் என மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு



திராவிடம் என்றால் என்ன என்று சில கோமாளிகள் பேசி வருகிறார்கள் என்று முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

‘இல்லம் தேடி கல்வி’த் திட்டத்தை விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் நடைபெற்ற நிகழ்வைத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார். பின்னர், அந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய முதல்வர் ஸ்டாலின், இல்லம் தேடி கல்வித் திட்டம் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி புகட்டும். நேரடி வகுப்புகள் தரும் பயனை இணையவழிக் கல்வி தராது. மாநில சுயாட்சி, மத நல்லிணக்கம் போன்ற பல செயல்களைச் செய்து வரும் நிலையில்தான் இல்லம் தேடி கல்வித் திட்டங்களையும் கொண்டுவருகிறோம். திராவிடம் என்றால் என்ன என்று சில கோமாளிகள் தெரியாமலே பேசி வருகிறார்கள். இதுபோன்ற திட்டங்கள்தான் திராவிடம். ஒரு காலத்தில் இன்னார் தான் படிக்கவேண்டும் இன்னார் படிக்கக்கூடாது என்று இருந்த நிலையை மாற்றிய ஆட்சி, திராவிட ஆட்சி. ஏழை எளிய விளிம்பு நிலை மக்கள் மற்றும் பட்டியலின பழங்குடியின மக்களுக்கு பல திட்டங்களை இந்த அரசு செயற்படுத்திவருகிறது என்று தெரிவித்துள்ளார்.



# கொரோனா விதிகளை மீறினால் அபராதம் சென்னை மாநகராட்சி எச்சரிக்கை அறிவிப்பு

பண்டிகை மற்றும் விடுமுறை நாள்கள் நெருங்கிவரும் நிலையில் கொரோனா விதிகளைப் பின்பற்றாத வணிக வளாகங்கள் மற்றும் தனி நபர்களுக்குக் கட்டாயம் அபராதம் விதிக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னையின் வணிக வளாகங்களில் பொதுமக்கள் அதிகளவில் கூடுகின்றமையைத் தவிர்த்து அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி குறைந்த அளவிலான நபர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், சென்னையில் வணிக வளாகங்கள், சந்தைகள் மற்றும் அங்காடிகள் அதிகமுள்ள தியாகராய நகர், புரசைவாக்கம், கோயம்பேடு, பாரிமுனை, பாடி போன்ற இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக இளைஞர்களால் ஆய்வு அறிக்கை

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் செயற்திட்டத்தில் திருகோணமலை மாவட்ட இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட சமூக ஆய்வுப் பயணத்தில் இளையோர் பங்குபற்றுதலின் பிரதிபலிப்புக்கள் என்ற தலைப்பிலான ஊடக சந்திப்பு திருகோணமலை மாவட்ட விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது இளைஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கை வெளியிடப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும், போதைப் பொருள் பாவனையும் இளையோர் சமூதாயமும் , தமிழ் மக்களும் மொழி உரிமையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தேவைப்பாடும் அதன் பிரயோக நிலையும் என்ற தலைப்புக்களிலான ஆய்வறிக்கைகள் வெளியிடப்பட்டன.

மூதூர்- மல்லிகைத்தீவு கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி பின் வரும் தகவல்கள் வெளியாகியுள்ளன.அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை தொடர்பாக இவ்வாறு தெரிவித்தார்கள் 2009 யுத்தத்தின் போதும், அதற்கு முன்னரும் வடக்கு கிழக்கில் அதிகளவானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றங்கள் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற போதிலும் கூட எந்த விதமான தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இவ்வாறு ஆண்டுகள் கடந்து செல்கின்றனவே தவிர மக்களுக்கு எவ்விதமான தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

நீதிக்கான பரிந்துரைகள்

1.சகலவிதமான நியாமற்ற கைதுகளும் சித்திரவதைக்கு உட்படுத்தலையும் கைது செய்யப்பட்டபோது நிகழ்ந்த உயிர் இழப்புக்களுக்காவும் விசாரனைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.காணமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நடைபெறும் விசாரணைகள், கொழும்பு மேல் நீதிமன்ற விசாரனைகளில் இருந்து விடுபட்டு மாவட்ட நீதிமன்ற விசாரனைகளின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

3.தொழில் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

நினைவு கூருதலுக்கான பரிந்துரைகள்

4.காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களிடம் மறைந்து இருக்கக் கூடிய ஆளுமை தன்னம்பிக்கை, துணிவு, மன வுறுதி என்பவற்றை வெளிக்கொணர்வதன் மூலமாகப் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், என்பவற்றை நடத்தி, சமூகத்தில் அவர்களையும் எழுச்சி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசு , அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும் என இளைஞர்களின் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலஞ்சம் பெற்ற பொலிஸாருக்கு உடனடியாக தற்காலிக நிறுத்தம்


மட்டக்களப்பில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது ஓட்டோ செலுத்திச் சென்றவரிடம் 5 ஆயிரம் ரூபா இலஞ்சமாக பெற்ற மட்டு தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிவரும் 3 பேர் உடனடியாக தற் காலிகமாக கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து செங்கலடி பிரதேசத்துக்கு முகத்துவாரம் வீதி ஊடாக ஓட்டோவில் நேற்று மாலை சென்று கொண்டிருந்த போது சவுக்கடி பாலத்திற்கு அருகில் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார் குறித்த ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்ட நிலையில் சாரதி அனு மதிப்பத்திரம் இன்றி ஓட்டோவைச் செலுத்துச் சென்றுள்ளமையைக் கண்டு பிடித்தனர்.

இதனையடுத்து ஓட்டோ சாரதியிடம் போக்குவரத்து பொலிஸார் சாரதி அனுமதிப்பத்திரமின்றி செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபோவதாகவும் அதனை செய்யாது அங்கிருந்து விடுவிக்க 10 ஆயிரம் ரூபா இலஞ்சமாக கோரியுள்ளனர்.

இதனையடுத்து 5 ஆயிரம் ரூபாதான் இருக்கின்றது என 5 ஆயிரம் ரூபாவை போக்குவரத்து பொலிஸார் இலஞ்சமாக பெற்ற பின்னர் அவரை விடுவித்தமையையடுத்து ஓட்டோ சாரதி உடனடியாக மட்டு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு சென்று தன்னிடம் 5 ரூபா இலஞ்சமாக போக்குவரத்து பொலிஸார் பெற்றுள்ளனர் என்று முறைப்பாடு செய்துள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தலில் உடனடியாக பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி தலைமையில் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றிவந்த 3 பொலிஸாரையும் உடன் அமுலுக்குவரும் வரையில் நேற்று புதன்கிழமை உடனடியாக கடமையில் இருந்து இடைநிறுத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.




# மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி காத்தான்குடியில் கார் ஒன்றுடன் மோட்டர் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டர்சைக்கிளை செலுத்தி சென்றவர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் காரை செலுத்திய வைத்தியர் ஒருவரை கைது செய்துள்ள சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்

காத்தான்குடியைச் சேர்ந்த 21 வயதுடைய ஆதம்பாவை முகமது அம்ஹர் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# காரைதீவு ப.நோ.கூ.சங்கத்தில் பழைய விலையில் பால்மா



கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், காரைதீவு ப.நோ.கூ.சங்கத்தில் பழையவிலையில் அங்கர் பால்மா விநியோகம் இடம்பெற்றுவருகிறது.

நாட்டில் பால்மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளநிலையில் கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மத்திய அரசு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து மக்களுக்கு பழையவிலையில் பால்மாவை விநியோகிக்கும் திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

அந்த வகையில், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண மக்களுக்கென 2கோடி ரூபாவுக்கு அங்கர் பால்மா கொள்வனவு செய்யப்பட்டு சகல கூட்டுறவுச் சங்கங்களினூடாகவும் விநியோகிக்க துரித நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதன்படி 400 கிராம் அங்கர் பால்மா 380 ரூபாவுக்கு விநியோகிக்கப்பட்டுவருகிறது.வெளியில் தற்போதையவிலை 480 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

காரைதீவு ப.நோ.கூ.சங்கத்துக்கு 1340 பக்கட் 400 கிராம் அங்கர் பால்மாவும், 53 பக்கட் ஒரு கிலோ அங்கர் பால்மா பக்கட்டும் கொள்வனவு செய்ததாக ப.நோ.கூ.சங்கத்தலைவர் வை.கோபிகாந்த் தெரிவித்தார். காரைதீவு ப.நோ.கூ.சங்கத்தலை வரும் பட்டதாரி ஆசிரியருமான வை.கோபிகாந் சமகால சூழ்நிலையை கருத்திற்கொண்டு, 3கிலோ சீனி, 400கிறாம் அங்கர் பால்மா, 200கிறாம் தேயிலை, ஒரு உப்பு பக்கட் அடங்கிய 1,000ரூபா பெறுமதியான உலருணவுப்பொதியை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தார்.




# டிஜிற்றல் பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையை டிஜிற்றல் பாடசாலையாக அபிவிருத்தி செய்யும் முதற்கட்ட வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

சிவானந்தா தேசிய பாடசாலையை டிஜிற்றல் மயமாக்கும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி தட்சயானந்தா ஜீ மஹராஜின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சிவானந்தா தேசிய பாடசாலையின் அதிபர் நவரெட்ணம் சந்திரகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி நீலமானந்தா ஜீ மஹராஜ், பாடசாலையின் உப அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் ச.சந்திரகுமார், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் என குறிப்பிட்டளவிலானோர் கலந்துகொண்டனர்.

# ஸ்கோட்லாந்தை மடக்கிய நமீபியா குழு - 2 இல் மூன்றாமிடத்தைப் பிடித்தது




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் -12 சுற்றின் நேற்றைய நாளின் இரண்டாவது போட்டியில் ஸ்கொட்லாந்தை, 4 விக்கெட்டுகளால் நமீபியா அணி வெற்றிபெற்றது. அபுதாபியில் நடைபெற்ற குழு- 2 இற்கான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நமீபிய அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஸ்கொட்லாந்து அணி, 20 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. மிச்செல் லீஸ்க் 44 ஓட்டங்களையும் கிறிஸ் க்ரேவ்ஸ் 25 ஓட்டங்களையும் எடுத்தனர். நமீபியா அணியின் ருபன் ட்ரம்பெல்மன் 3 விக்கெட்டுகளையும் ஜான் பிரைலிங் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நமீபியா அணி, 19.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை எட்டியது. ஸ்மித் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் க்ரெய்க் வில்லியம்ஸ் 23 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஸ்கொட்லாந்து அணியின் மிச்செல் லீஸ்க் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக நமீபியா அணியின் ருபன் ட்ரம்பெல்மன் தெரிவுசெய்யப்பட்டார்.

சூப்பர் -12 சுற்றில் தனது முதலாவது போட்டியில் விளையாடிய நமீபியா அணி, அந்தப் போட்டியில் வெற்றிபெற்று 2 புள்ளிகளோடு குழு - 2 இல் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குழுவில் முதலிடத்தில் பாகிஸ்தான் அணி 4 புள்ளிகளோடும், ஆப்கானிஸ்தான் அணி 2 புள்ளிகளோடு இரண்டாமிடத்திலுமுள்ளன. இந்தக் குழுவிலுள்ள ஏனைய அணிகளான நியூஸிலாந்து, இந்தியா, ஸ்கொட்லாந்து ஆகியவை தாம் விளையாடிய போட்டிகளில் தோல்வியைத் தழுவி, புள்ளிகளெதையும் பெறாதுள்ளன.




# பங்களாதேஷ் அணியை 8 விக்கெட்டுகளால் இலகுவாக வீழ்த்தியது இங்கிலாந்து அணி

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் - 12 சுற்றுக்கான நேற்றைய போட்டியில் இங்கிலாந்து அணி பங்களாதேஷ் அணியை 8 விக்கெட்டுகளால் இலகுவாக வெற்றிபெற்றது.

குழு -ஒன்றுக்கான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 124 ஓட்டங்களை பெற்றது. முஷ்பிகுர் ரஹீம் 29 ஓட்டங்களையும் மஹமதுல்லா மற்றும் நசும் அஹமட் ஆகியோர் தலா 19 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் டைமல் மில்ஸ் 3 விக்கெட்டுகளையும் மொயின் அலி மற்றும் லிவிங்ஸ்டன் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 14.1 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. ஜேஸன் ரோய் 38 பந்துகளில் அதிரடியாக 61 ஓட்டங்களையும் டேவிட் மலன் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம் மற்றும் நசும் அஹமட் ஆகியோர் வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ஜேஸன் ரோய் தெரிவானார். இங்கிலாந்து அணி குழு ஒன்றில் தான் விளையாடிய இரு போட்டிகளிலும் வெற்றிபெற்று 4 புள்ளிகளோடு முதலிடத்தில் உள்ளது. பங்களாதேஷ் அணி விளையாடிய இரு போட்டிகளிலுமே தோல்வியடைந்துள்ளது.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஜேசன் ஹோல்டர் இணைப்பு



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஜேசன் ஹோல்டர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் ஒபெட் மக்கொய், காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியுள்ளமையையடுத்து மாற்று வீரராக அணியில் இருந்த ஜேசன் ஹோல்டர், 15 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். 29 வயதான ஹோல்டர், 27 ரி-20 போட்டிகளில் இதுவரை விளையாடி 22 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார் 201 ஓட்டங்களையும் அடித்திருக்கிறார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் 55 ரன்களுக்கு ஆட்டமிழந்து தோல்வியடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்காவிடம் 8 விக்கெட் வித்தியாசத்தில்தோல்வியடைந்துள்ளது. நாளை நடைபெறறவுள்ள போட்டியில் பங்களாதேஷ் அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி எதிர்கொள்ளவுள்ளது.




# நியூஸிலாந்து அணியிலிருந்து பந்துவீச்சாளர் பெர்குஸன் காயம் காரணமாக விலகினார்

ரி-20 உலகக்கிண்ண தொடரின் நியூஸிலாந்து அணியிலிருந்து, முன்னணி வேகப்பந்துவீச்சாளர் லொக்கி பெர்குஸன் நீக்கப்பட்டுள்ளார் அறிவிக்கப்பட்டுள்ளது. குதிக்கால் பகுதியில் அவருக்கு உபாதை ஏற்பட்டுள்ளதாகவும், அது குணமாவதற்கு சற்று அவகாசம் தேவைப்படுமென்பதாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நியூஸிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. நியூஸிலாந்து அணியின் முக்கிய பந்துவீச்சாளரான லொக்கி பெர்குஸன் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காகவும் சிறந்த முறையில் பந்துவீசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது இழப்பு, நியூஸிலாந்து அணிக்கு மிகப்பெரிய பின்னடைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவருக்குப் பதிலாக வேகப்பந்துவீச்சாளர் அடம் மில்னே அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இதற்கான அனுமதியை சர்வதேச கிரிக்கெட் சபை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது

# உரத்தை வழங்குவதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்குக!

## வீ. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்

உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, உரத்தை வழங்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட கதிரைகள், நீர் தாங்கிகள், கூடாரங்கள் என்பன நேற்று (புதன்கிழமை) அக்கரப்பத்தனை ஹோல்புறுக் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வைத்து பய னாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

கொட்டகலை, அக்கரப்பத்தனை, லிந்துலை, டயகம உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கே இவ்வாறு இராதாகிருஷ்ணனின் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

முன்னேற்பாடுகள் எதுவும் இன்றி இரசாயன உரத்துக்கு திடீர் தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சீனாவில் இருந்து சேதனப் பசளையை இறக்குமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அந்த சேதனப் பசளையில் தீங்கு விளைவிக்கக்கூடிய பக்Tீரியாக்கள் இருக்கின்றன என எமது நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டினர். ஆய்வுகள்மூலம் அதனை உறுதிப்படுத்தினர்.

எனினும், இலங்கை நிறுவனத்தால் நடத்தப்பட்ட பரிசோதனையை ஏற்பதற்கு சீன நிறுவனம் மறுத்துள்ளது.

இதனால் மூன்றாம் தரப்பை நாடுவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை அனுமதிக்க முடியாது. மூன்றாம் தரப்பை நாடுவது எமது நாட்டிலுள்ள புத்திஜீவிகளை, ஆய்வாளர்களை அவமதிக்கும் செயலாகவே அமையும். – என்றார்.

## கட்டுநாயக்க விமான நிலையத்துடன் இணைந்த பிசிஆர் ஆய்வுகூடம் மீள திறப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்துடன் இணைந்த பி.சி.ஆர். மருத்துவ ஆய்வு கூடம் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதல்தடவையாக நேற்று (புதன்கிழமை) அதிகாலை 2.15 மணிக்கு கட்டாரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்த பயணிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பி.சி.ஆர். பரிசோதனையொன்றுக்காக 40 அமெரிக்க டொலர் கட்டணம் அறவிடப்படுவதுடன், பரிசோதனை முடிவுகள மூன்று மணித்தியாலங்களுக்குள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய 250 பேருக்கு எதிராக வவுனியாவில் நடவடிக்கை

வவுனியாவில் கடந்த மாதம் முதல் இன்று வரையான காலப்பகுதி வரையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய 250 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் கடந்த மாதம் முதல் நேற்று (புதன்கிழமை) வரையான காலப்பகுதியில் வீதிகளில் சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்பட்ட பலருக்கு எதிராக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையின்போது முககவசம் மற்றும் சமூக இடைவெளிகள் உட்பட சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்ட சுமார் 250 பேருக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொலிஸாரால் தொடர்ந்தும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தேவை இன்றி நகரில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும், சுகாதாரவழிகாட்டல்நடைமுறைகளைப் பொது மக்கள் பின்பற்றி நடக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச சபை செயலாளரை இடமாற்ற கோரி ஆர்ப்பாட்டம்!

மன்னார்– மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளரை இடமாற்றக் கோரி மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆதி அருணாசலம் தலைமையில் சபை உறுப்பினர்களால் நேற்று (புதன்கிழமை) காலை 11 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக அடையாள கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளரின் ஆளுமையற்ற செயற்பாட்டாலும் வினைத்திறன் அற்ற முடிவுகளாலும் அபிவிருத்திகள் மற்றும் வேலை திட்டங்கள் அனைத்தும் பின் நோக்கி காணப்படுகின்றன எனவும் எழுத்து மூல செயற்பாடுகள் மட்டுமே இடம்பெறுகின்றன எனவும் பௌதீக செயற்பாடுகள் எவையும் இடம் பெறுவதில்லை எனக் கோரி நேற்று காலை மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளர் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார் எனவும், குறிப்பாக கொள்வனவுகள், எரிபொருள் விற்பனைகள் என்பவற்றில் ஊழல் மேற்கொண்டுள்ளார் எனவும் அதை உறுப்பினர்கள் உறுதிப்படுத்தி வழங்கினர் எனவும் ஆனால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பவில்லை என போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மாந்தை மேற்கு பகுதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில் மாந்தைமேற்கு பிரதேசசபையின் செயலாளர் தொடர்ந்தும் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றார் எனவும் சபை தீர்மானங்களை நடைமுறைப்படுத்து வதில் அலட்சியம் காட்டுகிறார் எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பல முறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் அவர்கள் இடம்மாற்றம் செய்வதாக கோரியும் இதுவரை இடமாற்றம் செய்யவில்லை என்றும், விரைவில் புதியதொரு ஆளுமையுள்ள பிரதேச சபை செயலாளர் ஒருவரை நியமிக்குமாறும் அவ்வாறு நியமிக்காத பட்சத்தில் இன்னும் பல போராட்டங்களை மேற்கொள்ளத் தாங்கள் தயாராக உள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.



## கிரிக்கெட் போட்டியில் ரோஹித்த ராஜபக்ஷ?

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றில் பிரதமரின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷவும் பங்குபற்றியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

களுத்துறை மாநகர விளையாட்டுக் கழகம் மற்றும் கடற்படை கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 50 ஓவர்கள் கொண்ட இந்த போட்டி வெலிசரை கடற்படை மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய,நேற்று (புதன்கிழமை) சில போட்டிகள் நடைபெற்றுள்ளன என ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போது, களுத்துறை மாநகர விளையாட்டு கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷ பங்குபற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அதிகளவு இயற்கை உரத்தை பயன்படுத்த நடவடிக்கைகள்

## ஜனாதிபதி கூறுகின்றார்



புத்த பெருமானின் போதனைக்கமைய ஒழுங்கமைந்துள்ள முன்மாதிரி உரிமைகளைக் கொண்ட இலங்கை, மானுடத் தேவைகளுடன் சுற்றுச்சூழலைச் சமநிலைப்படுத்துவதன் அவசியத்தை நன்றாகப் புரிந்து கொண்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதிகளவு செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'மனிதன், பூமி மற்றும் சுபீட்சத்துக்கான காலநிலைச் செயற்பாடுகளை விருத்திசெய்தல்' என்ற தலைப்பிலான அரசதலைவர்கள்கலந்துரையாடலில், வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் உரையாற்றும் போதே, ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

சர்வதேச ரீதியிலான நிலக்கரியற்ற புதிய சக்தி வலு மாநாட்டின் இணைத் தலைவராக இருக்கின்றமையையிட்டு இலங்கை பெருமையடைகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ பிரகடனத்தின் கீழ், சதுப்பு நிலச் சுற்றாடல் கட்டமைப்பு மற்றும் ஜீவனோபாயம் தொடர்பான செயற்பாட்டுக் குழுவுக்கும் இலங்கை தலைமை வகிக்கின்றது.

பசுமை நைட்ரஜன் முகாமைத்துவம் தொடர்பான கொழும்பு அறிக்கையின் பிரகாரம், நைட்ரஜன் வாயு வெளியீட்டின் அளவை 2030ஆம் ஆண்டாகும் போது அரைவாசியாகக் குறைப்பதற்கு இலங்கை முயற்சி எடுத்துள்ளது. இலங்கையின் உள்நாட்டுக் கொள்கையின் வரையறை, மேலாண்மைபற்றி அவதானம்செலுத்தி உள்ளமையை நான் உறுதிப்படுத்துகின்றேன். இதனை நடைமுறைப்படுத்துவதற்காக, அதிகளவு செயற்கை உரத்தைப் பயன்படுத்து வதைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதோடு, அதன்மூலம் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், நைட்ரஜன் கழிவுகளைக் குறைத்துக் கொள்ளவும் முடியும்.

இலங்கையில் காபன் அளவை 2050ஆம் ஆண்டாகும் போது பூச்சியமாக்கிக்கொள்ள எதிர்பார்த்துள்ளதோடு, 2030ஆம் ஆண்டாகும்போது இந்நாட்டின் சக்தி வலுத் தேவையில் 70 சதவீதத்தை மீள்பிறப்பாக்கச் சக்தி மூலங்கள் மூலம் நிறைவு செய்து கொள்ளும் இலக்கை அடைந்துகொள்வதற்காக இலங்கை பயணித்துக் கொண் டிருக்கிறது. இந்தச் சிறப்பான நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக, எமது அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காகத் தொழில்நுட்பப் பரிமாற்றம், திறன் அபிவிருத்தி, முதலீடு மற்றும் நிதி நன்கொடை போன்ற துறைகளில் இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பை மகிழ்ச்சியோடு ஏற் றுக்கொள்ளுகின்றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.